அவர்களுக்குச் சொல்ல நமக்கு எந்தத் தகுதியும் இல்லாமல் போய்விடும். *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவே, நான் என்னுடைய உரைக்குப் பிறகு, இங்கே நான் ஆற்றிய உரைக்குப் பிறகு, அதன் அடிப்படையிலே வெளியிடப்பட்டுள்ள கருத்துகள், பேசப்படுகின்ற விஷயங்கள் எதுவானாலும், அது வை.கோ. பேசினாலும், யார் பேசினாலும்—அவர்தான் பேசுவார், யார் பேசினாலும் என்று நான் யாரையும் குறிப்பிட மாட்டேன். எனக்குத் தெரியும், யாரும் பேசமாட்டார்கள் என்று. பேசினாலும், நான் அதைப் பொருட்படுத்தப் போவதில்லை. ஏனென்றால், அத்தனை அடியும், உதையும், அத்தனை வலியும் எனக்கே உரியதாகட்டும். அது ஈழத்திலே இருக்கிற தமிழர்களுக்கு வேதனை தரவேண்டாம் என்பதற்காக, அதை நான் பொறுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்ற அளவோடு என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–30

3. கவன ஈர்ப்பு

திட்டச்சேரி சேந்தகுடி கிராமத்தில் மின் கம்பி அறுந்து விழுந்ததால் ஏற்பட்ட விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திருமதி பி. பத்மாவதி அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி பி. பத்மாவதி. *(குறுக்கீடுகள்)* அவர் பேசிவிடட்டும், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திருமதி பத்மாவதி, சொல்லுங்கள்.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதி, திட்டச்சேரி சேந்தகுடி என்ற கிராமத்தில் *16–08–2006* அன்று... *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைதியாக உட்காருங்கள், திருமதி பத்மாவதி, நீங்கள் பேசுங்கள்.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)* அதைத்தான் படிக்கிறேன். *(குறுக்கீடு)*

2006 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பத்மாவதி, நிகழ்ச்சி நிரலில் உள்ளதுபோலச் சொல்லுங்கள்.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "நன்னிலம் தொகுதி திட்டச்சேரி சேந்தகுடி கிராமத்தில் 16-8-2006 அன்று மின் கம்பி அறுந்து விழுந்ததால் ஏற்பட்ட விபத்து" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

நன்னிலம் தொகுதி திட்டச்சேரி சேந்தகுடி கிராமத்தில் 16-8-2006 அன்று காலை சுமார் 11-30 மணியளவில் பலத்த சூறாவளிக் காற்று வீசியதால், சேந்தமங்கலம் கிராமத்தில் சடையமூலை மின்மாற்றிக் கம்பம் எண் 2-க்கும் 4-க்கும் இடையே உள்ள தாழ்வழுத்த மின்பாதையின் 7/2.11 ACSR மி.மீ. 4 கம்பிகளுள் ஒரு மின்னோட்டமுள்ள கம்பி அறுந்து விழுந்துவிட்டது. அப்போது அங்கே மாடு மேய்த்துக் கொண்டிருந்த திரு. மாசிலாமணி, (வயது 45) என்பவரின் பசுமாடு, அறுபட்டுக் கிடந்த கம்பியை மிதித்ததால் இறந்தது. அப்போது அந்த வயலை ஒட்டியபடி உள்ள பாசன வாய்க்காலில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த திரு. மாசிலாமணி வாய்க்காலைக் கடக்கும்போது, தொங்கிக் கொண்டிருந்த அதே தாழ்வழுத்த மின்கம்பி அவர் தலையிலும், அவர் ஓட்டி வந்த காளை மாட்டின்மீதும் பட, அதே இடத்தில் அவர் மின் அதிர்ச்சியால் இறந்துவிட்டார். அவரது மாடும் இறந்து விட்டது. இந்த விபத்து குறித்து திட்டச்சேரி காவல் நிலையத்தில் 16-8-2006 அன்று F.I.R. எண் 350/2006-ன்கீழ் புகார் பதிவு செய்யப்பட்டது. மேலும், அந்த அறுந்த மின் கம்பி அன்றே சரிசெய்யப்பட்டு அப்பகுதிக்கு சீரான மின்னூட்டமும் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரிய விதிப்படி, (Per) B.P.(FB) No.4 (Adm.Br.). dated 29-01-1998)-ன்படி மனிதர்கள் மின் விபத்து ஏற்பட்டு இறந்தால்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2006 ஆகஸ்ட் 21

அவருடைய குடும்பத்திற்கு ரூ.25,000/–ம், மிருகங்கள் இறந்தால் ரூ.2,000/–ம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, குறிப்பிட்ட மின்பகிர்மான வட்டத்திலிருந்து அதற்கு உரிய சான்றிதழ்களும், கருத்துருவும் கிடைக்கப்பெற்ற பின்னர், இதற்கான தக்க உத்தரவு வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியத்திலுள்ள திருக்கண்ணபுரம் ஊராட்சியைச் சார்ந்த சேந்தமங்கலம் என்ற கிராமத்தில் 16–8–2006 அன்று மாடு மேய்த்துக் கொண்டிருந்த தலித் இளைஞர். கோபால் என்பவரின் மகன் மாசிலாமணி, வயது 45, மின் கம்பி அறுந்து விழுந்து இருந்ததால், இரண்டு மாடுகளும், அவரும் மின்சாரம் தாக்கி பலியாகியுள்ளார்கள். எனவே, சாதாரண, ஏழை எளிய இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த இவருக்கும், அந்தக் கால்நடைகளுக்கும், இழப்பீடாக நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விபத்து குறித்து திட்டச்சேரி காவல் நிலையத்தில் 16–8–2006 அன்று F.I.R. எண் 350/2006–ன்கீழ் புகார் பதிவு செய்யப்பட்டது. மேலும், அந்த அறுந்த மின் கம்பி அன்றே சரிசெய்யப்பட்டு அப்பகுதிக்கு சீரான மின்னூட்டமும் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரிய விதிப்படி, (Per) B.P.(FB) No. 4 (Adm.Br.). dated 29-01-1998)–ன்படி மனிதர்கள் மின் விபத்து ஏற்பட்டு இறந்தால் ரூ.25,000/–ம், மிருகங்கள் இறந்தால் ரூ.2,000/–ம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல, உயிர் இழந்த மாசிலாமணி அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.25 ஆயிரமும், இறந்துவிட்ட அந்த மாடுகள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ.2 ஆயிரமும் மின்சார வாரியத்தின்மூலமாக அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

2006 ஆகஸ்ட் 21]

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்திருப்பதை நான் வரவேற்பதோடு, மின்சாரம் தாக்கி இறந்தவருக்கு ரூ.25 ஆயிரம் என்றும், கால்நடைகளுக்கு ரூ.2 ஆயிரம் என்றும் அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கால்நடைகளுடைய மதிப்பே கிட்டத்தட்ட குறைந்தபட்சமாக எடுத்துக்கொண்டால்கூட, ஒவ்வொன்றும் ரூ.10 ஆயிரத்திற்கு மேற்பட்டதாக இருக்கிறது. எனவே, அந்த வகையில் கூடுதலான தொகையை வழங்கவேண்டும் என்றும், இறந்தவருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ. 1 இலட்சம் கருணையோடு வழங்க வேண்டுமென்றும் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: ஏற்கெனவே ஒரு அரசாங்கம் முடிவெடுத்து மின் கம்பி அறுந்து விழுந்தால் அதனாலே பாதிப்புக்குள்ளானவர்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று மின் வாரியம் முடிவெடுத்து இருக்கிறதோ அந்த அடிப்படையிலேதான் மின்சார வாரியம் வழங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளைப் பரிசீலிக்க வேண்டும் என்று அரசு முயற்சித்தாலும், ஆங்காங்கே நடைபெறுகின்ற இப்படிப்பட்ட விபத்துகள் மூலம் மின் வாரியத்திற்கு மேலும் இழப்பீடு ஏற்படாமல் இருக்க, ஏற்கெனவே அறிவித்திருக்கிற 25 ஆயிரம் ரூபாய் பணத்தை மின் வாரியம் அளிக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

2. தகவல் கோரல்–தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதிக்கக் கோரல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பதர் சயீத் (குறுக்கீடு) என்னம்மா? என்ன விஷயம் சொல்லுங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் இருக்கட்டும். விதி 121–லே என்ன இருக்கிறது என்று தெரியும். சொல்லுங்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS